# POLICE

| காவல்துறை என்பது | காவல்துறை பணிக்கான தகுதி |
|---|---|
| P - Protection | P - Politeness - மரியாதை, நற்பண்பு |
| O - of | O - Obedient - ஒழுக்கம் |
| L - Life | L - Loyalty - விசுவாசம் |
| I - in | I - Intelligence - புத்தசாலிதனம் |
| C - Civil | C - Courtly - பெருந்தன்மை<br>Courage - துணிவு |
| E - Establishment<br>பொது மக்களின் உயிரையும் உடமைகளையும் பாதுகாக்கும் ஸ்தாபனம் (துறை) | E - Efficiency - சாமர்த்தியம்<br>Endurance – சகிப்புதன்மை<br>ஆகிய குணநலன்கள் இருக்க வேண்டும் |

## PSO ( Police Standing Order – காவல் நிலை ஆணைகள்

( மூன்று பகுதிகள் உள்ளன)

## PSO- I

**Organization .....................** காவல்துறை அமைப்பு
**Administration..................** நிர்வாக அமைப்பு
**Duty ............................** அலுவல்முறை

**Chapter (அத்தியாயம்) – 47**
**Order ( ஆணைகள்) - 856**

## PSO - II

**Special Laws and Local Laws and Police Uniforms**
( தனி சட்டம் மற்றும் உள்ளுர் சட்டம் மற்றும் காவல்துறை சீருடைகள் பற்றியது )

## PSO –III

**All forms (** காவல்துறை ஆவணங்களில் உள்ள படிவங்களின் மாதிரிகள் )

| | |
|---|---|
| Supdt of Police is the head of the District Police Force | PSO 135 |
| SP Inspection | PSO 154 |
| Safe Custody of Duplicate Key of Cash Chest & Almiras | PSO 162 |
| Revolver Practice | PSO 163 |
| Visit to Neighboring State When over an Accused is to be Apprehended (or) good Seized | PSO 173 |

| | |
|---|---|
| **Inspector of Police ( Law and Order duty)** | **PSO 179** |
| **Station Inspection by the Inspector of Police** | **PSO 180** |
| **Counter Sign Subordinate Case diary** | **PSO 182 (1)** |
| **Inspection of Station by Inspector** | **PSO 183(b)** |
| **Festival and Public Assemblies** | **PSO 184** |
| **Station House Officer** | **PSO 195** |
| **Responsibility for Station administration** | **PSO 196** |
| **SHO Instruction of Subodinates** | **PSO 198** |
| **Duties of SI in single station circle** | **PSO 200** |
| **Investigation ( not Lower in Rank than a SI )** | **PSO 199** |
| **Out Post Head Constable In charge** | **PSO 208** |
| **General duty Head Constable , He will also be available guard(or) Escort, He will should visit all the village at least Once in a quarter** | **PSO 202** |
| **Station Writer** | **PSO 203** |
| **Station in charge** | **PSO 204** |
| **Inspector Case's Diary** | **PSO 211** |
| **SHR Sent** | **PSO 212** |
| **Circle Information Book** | **PSO 218** |
| **Off Duty** | **PSO 243** |
| **Causal Leave** | **PSO 266(4)** |
| **Cash book maintance** | **PSO 262** |
| **Pay and Allowance** | **PSO 252** |
| **Travelling Allowance ( T.A)** | **PSO 276** |
| **Arms License Register maintance** | **PSO 319** |
| **Lathi is required for Self Defense** | **PSO 245** |
| **FIR Register** | **PSO 551** |
| **FIR to whom sent** | **PSO 552** |
| **Express Report** | **PSO 555** |

| | |
|---|---|
| **Station Limit Doubtful FIR** | **PSO 559** |
| **Refusal of Investigation** | **PSO 562** |
| **Case Diary** | **PSO 567 to 572** |

| | |
|---|---|
| **Mahazar , Sketch** | **PSO 569 (2)(3)** |
| **Confession recorded** | **PSO 599 (1)** |
| **Charge Sheet** | **PSO 572** |
| **Recovery of Stolen property House search** | **PSO 569(1)** |
| **Road Accident** | **PSO 582** |
| **Identification** | **PSO 600 (4)** |
| **Arrest** | **PSO 622** |
| **Govt Employs Arrest** | **PSO 628(1)** |
| **Search of prisoner (PSR)** | **PSR 636** |
| **Use of Hand Cuffs** <br> **( During trail should not be hand cuffed except with the Permission of the Court )** | **PSO 641** |
| **Use of Hand Cuffs should not be used Political Prisoners** | **PSO 641(7)** |
| **Remand of accused to Police custody** | **PSO 645** |
| **Bail ( Empowered U/s 436,437 Crpc )** | **PSO 655** |
| **Final Reports ( Prescribed by section 173 Crpc for Referring case as False and UN)** | **PSO 658** |
| **Time of Search** | **PSO 673** |
| **Conduct of Search** | **PSO 674** |
| **Search List** | **PSO 675** |
| **Appeal Against Acquittal** | **PSO 670** |
| **Un natural Death and Sudden Death ( 174 Crpc )** | **PSO 583** |
| **Death in Jail ( 174 Crpc)** | **PSO 583 (2)** |
| **PM examination & Wound certificate** | **PSO 587** |
| **PM & Wound certificate to whom sent** | **PSO 590, 591** |
| **Chemical analysis report** | **PSO 594** |
| **Post mortem of an animal** | **PSO 597** |

| | |
|---|---|
| **Head Constable Investigation (Out Post)** | **PSO 585** |
| **GD** | **PSO 706** |
| **Gage** | **PSO 709** |
| **Note book** | **PSO 710** |
| **Arrest Card** | **PSO 712** |
| **PSR** | **PSO 713** |
| **Bail bond** | **PSO 714 (664)** |
| **Process Register** | **PSO 715** |
| **Petty Case Register** | **PSO 716** |
| **Duty Roster** | **PSO 717** |
| **Village roster** | **PSO 718** |
| **Sentry Relief book** | **PSO 719** |
| **Dispatch Register** | **PSO 724** |
| **Superior Inspection Book** | **PSO 725** |
| **Superior visiting Book** | **PSO 725** |
| **Medical History Sheet** | **PSO 726** |
| **Defaulter Sheet** | **PSO 727** |
| **SS Book** | **PSO 293** |
| **Part - I** | **PSO 742** |
| **Part – I ( Annual Crime Review )** | **PSO 743(1)** |
| **Part – II** | **PSO 744** |
| **Part -III** | **PSO 745** |
| **Part – IV** | **PSO 756** |
| **Part - V** | **PSO 746** |
| **History Sheet open** | **PSO 746** |
| **History Sheet Closed** | **PSO 748** |
| **Writer Duty** | **PSO 831** |
| **SI and Duty** | **PSO 827** |

| | |
|---|---|
| **Witness name and Address , nature of Evidence should written in the Charge sheet** | **PSO 567 to 572** |
| **LLI, Name War, Local, Other Station Ex-convict check** | **PSO 753** |
| **BCR "A"** | **PSO 754** |
| **BCR "B"** | **PSO 754** |
| **OV card** | **PSO 767** |
| **Accused Death in Police Custody Enquiry** | **PSO 151** |
| **பிரேத புலன்விசாரணை அறிக்கை Insurance கம்பெனிக்கு வழங்குவது** | **PSO 584** |
| **காவலா் குற்றம் சாட்டபட்டவரிடம் கேள்வி கேட்பது** | **PSO 597** |
| **Gun Licence Check** | **PSO 319** |
| **பிரேத பரிசோதனைக்கு பின்னா் பிரேதத்தை உறவினரிடம் ஒப்படைப்பது** | **PSO 589** |

## காவல் நிலைய பதிவேடுகள்

************************

ஒரு காவல் நிலைய எல்கை 8 கிலோ மீட்டா் முதல் 16 மீட்டா் வரை உள்ளதாக இருக்க வேண்டும்

## காவல் நிலைய பதிவேடுகள் 3 வகைபடும்

***************************************

1) குற்ற பதிவேடுகள் ( **Crime Records )** - 13
2) புலனாய்வு பதிவேடுகள் ( **Investigation Records)** - 14
3) பொது நிர்வாக பதிவேடுகள் ( **Administration Records)** - 21

## குற்றபதிவேடுகள் - (Crime Records ) - 13

************************************************

| | | | |
|---|---|---|---|
| **1)** | **( Part – I )** உண்மை சம்பவ பதிவேடுகள் | **PSO 742** | **Form No 107** |
| **2)** | **Part – II Crime chart(** குற்ற வரைபடம் ) | **PSO 744** | **Form No -Nil** |
| **3)** | **Part – III General Conviction Register (GCR)** பொது தண்டனை பதிவேடு | **PSO 745** | **form No 129** |
| **4)** | **Part – IV (Village History sheet)** கிராம சரித்திர ஏடு | **PSO 756** | **Form No 110** |
| **5** | **Part - V ( Bad Character History sheet** கெட்ட நடத்தைகாரா்கள் சரித்திர பதிவேடு | **PSO 746** | **Form No 124** |
| **6** | **LLI ( Alphapatical Loose Leaf Crime classification Index)** அகர வரிசை குற்ற வகைபாட்டு தனிதாள் அட்டவணை | **PSO 753** | **Form – Nil** |
| **7** | **Name war Index (** பெயா் அகர வரிசை பட்டியல்) | **PSO 753** | |

| | | | |
|---|---|---|---|
| 8 | **Local Station Ex convict Register** (உள்ளூர் பழங்குற்றவாளிகள் பதிவேடு) | **PSO 753** | |
| 9 | **Other Station Ex convict Register** வெளி காவல் நிலைய பழங்குற்றவாளிகள் பதிவேடு) | **PSO 753** | |
| 10 | **BCR – A ( Bad Character roll)** கெட்ட நடத்தைக்காரர்கள் விசாரணை படிவம் | **PSO 754** | **Form no 128** |
| 11 | **BCR – B ( Bad Character roll)** கெட்ட நடத்தைக்காரர்கள் விசாரணை படிவம் | **PSO 754** | **Form no 128** |
| 12 | **Conviction Memo (** தண்டனை நமுனா | **PSO 803** | **Form no 140** |
| 13 | **Gage Abstract (** குற்ற சுருக்கம் பதிவேடு | **PSO 709** | **Form no 109** |

## புலனாய்வு பதிவேடுகள் - (Investigation Records) - 14

****************************************************

| | | | |
|---|---|---|---|
| 1 | **General diary(** பொது நாட்குறிப்பு ) | **PSO 706** | **Form 84** |
| 2 | **First Information Report (FIR)** (முதல் தகவல் அறிக்கை) | **PSO 551** | **Form 78** |
| 3 | **FIR Index** (முதல் தகவலறிக்கை பதிவேடு) | **PSO 12** | **Nil** |
| 4 | **Prisoner Search Register (PSR)** கைதி பரிசோதனை பதிவேடு | **PSR 713** | **Form 94** |
| 5 | **Arrest Card (** கைது அட்டை ) | **PSO 712** | **Form 110** |
| 6 | **Sentry Relief book (** காவல் மாற்று பதிவேடு) | **PSO 719** | **Form 57** |
| 7 | **Form 95 (** சொத்து அனுப்ப வேண்டிய படிவம்) | **PSO 676** | **Form 95** |
| 8 | **Bail bond (** ஜாமின் பத்திரம்) | **PSO 664** | **Form 97** |
| 9 | **Process Register (** சம்மன்,வாரண்டு பதிவேடு | **PSO 715** | **Form 111** |
| 10 | **Case Diary (** வழக்கு நாட்குறிப்பு) | **PSO 567** | **Form 82** |
| 11 | **House Search slip (** சோதனை படிவம் ) | **PSO 675** | **Form 102** |
| 12 | **Charge Sheet (** குற்றபத்திரிகை ) | **PSO 573** | **Form 87** |
| 13 | **Final Report (** இறுதியறிக்கை ) | **PSO 658** | **Form 99** |
| 14 | **Referred and Charge sheet Notice ( RC Notice)** | **PSO 660** | **Form 100** |

## பொது நிர்வாக பதிவேடுகள் - (Administration Records) - 21

************************************************************

| | | | |
|---|---|---|---|
| 1 | **Duty Roster (** அலுவல்முறை பதிவேடு) | **PSO 717** | **Form 115** |
| 2 | **Village Roster (** கிராம பதிவேடு) | **PSO 718** | **Form 116** |
| 3 | **Petty Case Register (** சிறு வழக்கு பதிவேடு) | **PSO 716** | **Form 117** |
| 4 | **Superior Inspection Book** (உயர் அதிகாரிகள் ஆய்வு பதிவேடு) | **PSR 725** | **Form 118** |
| 5 | **Superior visiting Book** (உயர் அதிகாரிகள் பார்வை பதிவேடு) | **PSO 725** | **Form 118** |
| 6 | **Gun Licence Register** துப்பாக்கி உரிமம், தணிக்கை பதிவேடு | **PSO 319** | **Form 16** |
| 7 | **Gun Deposite Register** துப்பாக்கி வைப்பு பதிவேடு | **PSO 322** | **Form 54** |
| 8 | **Govt Property Register** அரசு சொத்து பதிவேடு | **PSO 241** | **Form 97** |
| 9 | **Cash Book** (பண பதிவேடு) | **PSO 262** | **Form Nil** |

| | | | |
|---|---|---|---|
| 10 | **Community Service Register** சமுதாய பணி பதிவேடு | **PSO nil** | **Form Nil** |
| 11 | **Rowdy Register ( போக்கிரி பதிவேடு)** | **PSO nil** | **Form Nil** |
| 12 | **KD check Register (கெட்ட நடத்தைக்காரர்கள் தணிக்கை பதிவேடு)** | **PSO 368(3)** | **Form 64** |
| 13 | **Off duty Roster வார ஓய்வு பதிவேடு** | **PSO 243** | **Form Nil** |
| 14 | **Extra Time Remuneration (ETR) அதிக நேர அலுவல் ஊதிய பதிவேடு** | **PSO 243(5)** | **Form Nil** |
| 15 | **Note Book** | **PSO 710** | **Nil** |
| 16 | **Casual Leave Register ( CL )** | **PSO 266** | **Nil** |
| 17 | **Dispatch Register** | **PSO 724** | **Nil** |
| 18 | **Medical History Sheet** | **PSO 726** | **Nil** |
| 19 | **Defaulter sheet** | **PSO 728** | **Nil** |
| 20 | **Small service Book** | **PSO 293** | **Nil** |
| 21 | **General Information Book** | **Nil** | **Nil** |

## Part – I உண்மை சம்பவ பதிவேடு PSO 742 Form No 107

******************************

P - Professional தொழில்
N.P - Non Professional தொழிலாக இல்லாதது
( தற்போது நடைமுறையில் இல்லை)

**திருட்டு வழக்குகளில் தற்போது நடைமுறையில் உள்ளது**

**********************************************************

H - Habitual - ஆதயம் கருதி திருட்டை வழக்கமாக செய்பவர்

NH – Non Habitual வழக்கமாக திருடு செய்யாதவர். (திருட்டை ஆதாயம் கருதி செய்யாதவர்)

திருடு செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒருவருடைய பொருளை எடுக்காமல் தனக்கு எதிரானவருக்கு ஒரு இழப்பீட்டை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அவருடைய பொருளை எடுத்தால் அதை NH ( Non Habitual ) ஆக கருத வேண்டும். வழக்கில் சட்டபிரிவு எழுதும்போது சட்டபிரிவுக்கு பின்னால் (NH) என குறிப்பிட வேண்டும். குறிப்பாக 379 IPC (NH) என குறிப்பிட வேண்டும். அது போன்ற வழக்குகளை **Part – I** ல் **( உண்மை சம்பவ பதிவேடு )** பதிவு செய்தல் கூடாது. அவற்றினை சொத்து வழக்கு தலைப்பில் சேர்க்ககூடாது. Crime Review ல் கணக்கிட கூடாது

உண்மையான சொத்து வழக்கு தாக்கலாகும்போது அவற்றினை **Part – I ( உண்மை சம்பவ பதிவேடு )** ல் படிவத்தில் கண்ட காலங்களின் படி பதிவு செய்ய வேண்டும்

வழக்கிற்கு MO ( modus of Operandi – செயல்முறை ) குறிப்பிட வேண்டும். மேற்படி வழக்கை LLI ல் வழக்கின் தன்மைக்கேற்ப உள்ள தலைப்பின் கீழ் உள்ள பக்கத்தில் உள்ள படிவத்தில் பதிவு செய்ய வேண்டும்.

எதிரி என்ன மாதிரியான குற்றவாளி என குறிப்பிட வேண்டும்

உதாரணமாக எதிரி தன்னுடைய சொந்த மாவட்டத்திற்குள் குற்றம் செய்தால்

அவனை Local First offender ( LFO) எனவும், தண்டனை பெற்ற பழைய குற்றவாளி என்றால் (L.Ex-con) என்றும், வேறு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றால் அவர்களை Non Local First Offender (NLFO ) எனவும், தண்டனை பெற்ற பழைய குற்றவாளி என்றால் (N.L.Ex-con) என்றும் குறிப்பிட வேண்டும்

சொத்து இழப்பு குறிப்பிட வேண்டும்

சொத்து கண்டு பிடிக்கபட்டால் அதன் விபரத்தினை குறிப்பிட வேண்டும்

திருட்டு சொத்து வாங்கியவர்கள் இருந்தால் அவர்களையும் குறிப்பிட வேண்டும்

வழக்கு தண்டனையில் முடிந்தால் திருட்டு சொத்து வாங்கியவர்கள் மீது சட்டபிரிவு 411 இதச ன்படி வழக்கு பதிவு செய்ய வேண்டும்

அமாவசை, பௌர்ணமி நாட்களை தனிதனியாக குறிப்பிட வேண்டும்

**Cross Reference** போட வேண்டும்

| |
|---|
| Part – I Vol …………….. Page No …………………….. |
| LLI page No ………………… |
| General Conviction Register Vol No ………………. Page No ……………. |
| Local Ex – convict Reg Page No …………….. |
| Other Station Ex.Convit Reg page No ………………. |
| Name War Index Page No…………………………… |
| Conviction Memo No …………………….. |

முதல் இரண்டு காலங்களும் வழக்கு தாக்கலாகும் போது பதிவு செய்யபடகூடியது
அடுத்த காலங்கள் வழக்கு தண்டனையில் முடிந்தால் பதிவு செய்ய கூடியவைகள்
வழக்கு முடிந்த பின்னர் அதன் விபரங்களையும் பதிவேட்டில் குறிப்பிட வேண்டும்

வழக்கு தண்டனையில் முடியும்போது அதில் உள்ள குற்றவாளி Local குற்றவாளியாக இருந்தால் அவரை Local Exconvict Register லும் அடுத்த மாவட்டத்தில் உள்ளவராக இருந்தால் Other Station Ex Convict Register லும் பதிவு செய்ய வேண்டும்

சொத்து வழக்கில் சம்மந்தபட்ட எதிரி வேறு வழக்கில் சம்மந்தபட்டு தண்டனை பெற்றுள்ளது தெரியவந்தால் ( எதிரியின் வாக்குமூலத்தின் மூலமாகவோ அல்லது கைரேகை அறிக்கை மூலமாவோ) அதன் விபரத்தை தெரிந்து சம்மந்தபட்ட நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கொடுத்து தண்டனை விபர பட்டியல் ( Calender Extract) பெற்று குற்ற பத்திரிகை தாக்கல் செய்யும் போது குற்றபத்திரிகையில் பழைய தண்டனையையும் குறிப்பிட்டு சட்ட பிரிவில் 75 இதச வையும் சேர்க்க வேண்டும்

## Part – II Chart ( காவல் நிலைய சரக வரைபடம் )

*************************************

காவல் நிலைய எல்கை 8 முதல் 16 கிமி சுற்றளவு உள்ளவையாக இருக்க வேண்டும்

குற்ற வரைபடம் நான்கு பாகமாக உள்ளது
-----------------------------------------------------

Beat Chart ( ரோந்து விளக்க படம்)
Crime Chart ( குற்ற விளக்க படம்)
Prohibition Chart ( மதுவிலக்கு குற்ற விளக்கபடம்)
Accident Chart ( விபத்து விளக்க படம்)

ஓவ்வொரு ஆண்டிற்கும் நான்கு படங்களும் தயார் செய்ய வேண்டும்.
ஓவ்வொரு ஆண்டும் தயார் செய்யபடும் நான்கு விளக்கபடங்களும் 5 ஆண்டுகள் வரை பாதுகாக்கபட வேண்டும்

## 1) Beat Chart ( ரோந்து விளக்க படம்)

-----------------------------------------------------

ரோந்து விளக்க படத்தில் காவல் நிலையத்தில் எத்தனை ரோந்துகள் உள்ளன என்பதினை குறிப்பிட வேண்டும்
ரோந்தில் உள்ள கிராமங்களில் உள்ள கெட்ட நடத்தைகாரர்களை குறித்து குறிப்பிட வேண்டும் ( ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கலரில் குறிப்பிட வேண்டும்)

## 2) Crime Chart ( குற்ற விளக்க படம்)

-------------------------------------------------

ஓவ்வொரு கிராமத்தில் நடைபெறும் சொத்து வழக்குகளை அவற்றில் குறிப்பிட வேண்டும் குற்ற எண் சட்டபிரிவு என குறிப்பிட கூடாது

<u>மாதிரியாக II.L, III c4, III j</u> என்றுதான் குறிப்பிட வேண்டும்
10.06.2014

Border காவல் நிலையங்களில் பதிவாகும் குற்ற வழக்குகளையும் சம்மந்தபட்ட காவல் நிலையங்களில் விபரம் கேட்டு Crime Chart ல் பதிவு செய்திட வேண்டும்

## 3) Prohibition Chart ( மதுவிலக்கு குற்ற விளக்கபடம்)

******************************************************

மதுவிலக்கு குற்றங்கள் எந்த கிராமங்களில் நடந்துள்ளதோ அந்த கிராமத்தில் குறிப்பிட வேண்டும்
கு.எண், சட்டபிரிவு என பதிவு செய்ய கூடாது
Prohibition Case, Head அடிப்படையில் சம்பவ தேதியை குறிப்பிட்டு பதிவு செய்ய வேண்டும்
குறிப்பாக வரைபடத்தில் குறிப்பிடும்போது <u>IV(g)</u> <u>V</u> என குறிப்பிட வேண்டும்
5.2.14 10.05.14

| Head | Section | Offence |
|---|---|---|
| I | | எரிசாராயம் மற்றும் வெளிநாட்டு மதுபானம் வைத்திருந்தால் அல்லது விற்பனை செய்தால் |
| IV(b) | 4(1)(b) TNP Act | மதுபானம் தயாரித்தல் |
| X | 4(1)(d) TNP act | கள் இறக்கினால் |
| IV(g) | 4(1)(g) TNP act | மதுபானம் தயாரிப்பதற்கான மூலபொருட்களை , சாதனங்களை வைத்திருந்தால் |

| | | |
|---|---|---|
| V | 4(1)(a) TNP Act | மதுபானம் விற்பனைக்கு தன் வசம் வைத்திருந்தால் |
| | 4(1)(aa) TNP Act | 50 லிட்டருக்கு மேற்பட்டு 100 லிட்டருக்கு குறைவாக வைத்திருந்தால் |
| | 4(1)(aaa) TNP Act | 100 லிட்டருக்கு மேலாக வைத்திருந்தால் |
| VI | 4(1)(i) TNP Act | மதுபானம் விற்பனை செய்தால் |
| VIII | 4(1)(a) TNP Act (Transport) | மதுபானம் வாகனத்தில் கடத்தி செல்லுதல் |
| XVIII | 20(1)(b) NDPS act | கஞ்சா வைத்திருந்தால் |

## 4) Accident Chart ( விபத்து விளக்க படம்)

*****************************************************

304(A) IPC மரணம் உண்டு பண்ணுவது
279,338 IPC கொடுங்காயம் உண்டு பண்ணுவது
279,337 IPC சிறு காயம் உண்டு பண்ணுவது
279 IPC காயம் இல்லாமல் விபத்து ஏற்படுவது

ஒவ்வொரு சட்டபிரிவிற்கும் ஒரு கலரை தேர்வு செய்து விபத்து நடைபெற்ற கிராமத்தில் அந்த கலரில் வட்டமிட்டு தேதியை குறிப்பிடவேண்டும்

**Part – III General Conviction Register (GCR) பொது தண்டனை பதிவேடு**

**********************************************************

சொத்து வழக்குகள் தண்டனையில் முடியும் போது அவற்றினை இந்த பதிவேட்டில் குறிப்பிடபட்டுள்ள காலங்களில் பதிவு செய்திட வேண்டும்

எதிரிகளுக்கான தண்டனை நமுனா சென்னை கைரேகை கூடத்திற்கு சென்று திரும்பியவுடன் அதில் எதிரியினுடைய கைரேகை நம்பர் குறிப்பிடபட்டிருக்கும். அதனையும் தேதியையும் Regular Criminal No யையும் தெரிந்து பதிவேட்டில் குறிப்பிட வேண்டும்

எதிரி வேறு காவல் நிலையத்தை சேர்ந்தவர் என்றால் GCR ல் பதிவு செய்த விபரங்களை ஒரு நகல் எடுத்து அதனை சம்மந்தபட்ட காவல் நிலயைத்திற்கு அனுப்பி அங்குள்ள GCR பதிவேட்டில் பதிவு செய்து அதன் விபரத்தை தங்களது காவல் நிலைய பதிவேட்டில் பதிவு செய்திட வேண்டும்
மாதிரியாக கூடன்குளம் காவல் நிலையத்தில் பதிவு செய்யபட்டால் அதன் விபரத்தை தங்களது காவல் நிலையத்தில் Koodankulam PS. GCR Vol No …10. Page No 18 Sl.No 112 . என குறிப்பிட வேண்டும்

ஆய்வாளர் காவல் நிலையத்தை ஆய்வு செய்யும் போது 10 வருடங்களுக்கு முன்னதாக தண்டனை பெற்றவர்களுடைய பெயர்களை PSO 745 (3) ன்படி நீக்கம் செய்யலாம்

## Part – IV (Village History sheet) கிராம சரித்திர ஏடு

************************************************

ஒவ்வொரு தாய் கிராமத்திற்கு அதனை சார்ந்த குக்கிராமத்தினையும் சேர்த்து சரித்திர பதிவேடு பராமரிக்க வேண்டும். அதனில் நான்கு பகுதிகளாக பிரித்து பராமரிக்க வேண்டும். General Information, Law and Order, Crime and Criminals, Miscellaneous என்பதான தலைப்பின் கீழ் பராமரிக்க வேண்டும். குறிப்பாக தாய்கிராமம் குக்கிராமங்களில் பதிவு செய்யபடும் அனைத்து வழக்குகளையும் பதிவு செய்ய வேண்டும். பாஸ்போட் விசாரணைக்காக அவை முக்கியமானவைகள் ஆகும்

கிராமங்களில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை பதிவு செய்ய வேண்டும். மேலும் கிராமங்களை குறித்த எல்லா விபரங்களும் இருக்க வேண்டும். அந்த கிராமத்திற்கான MP, MLA, Panchayat President, VAO, VA, RI, Tahsildor, ஊர் தலைவர், ஊரில் உள்ளவர்கள் துப்பாக்கி வைத்திருந்தால் அதன் விபரம், கட்சி தலைவர் விபரம் காவல் துறையினருக்கு தகவல் தருவோர் குறித்த விபரம் ஆகியவைகளும் குறிப்பிடபட்டிருக்க வேண்டும்

**Part - V Bad Character History sheet (கெட்ட நடத்தைகாரர்கள் சரித்திர பதிவேடு)**
*****************************************************************

HO - Habitual offender - வழக்கமான குற்றவாளி
DC - Dossier Criminal - கைச்சுவடி குற்றவாளி
KD - known Depredator - ஊரரிந்த குற்றவாளி
Suspect - - சந்தேக நபர்

மேற்கண்டவைகள் சொத்து வழக்குகளில் சம்மந்தபட்டவர்கள் மீது ஆரம்பிக்கபடுபவைகள்

Rowdy - போக்கிரி: இவர்கள் போக்கிரிதன வழக்குகளில் ஈடுபடுபவர்கள் மீது பதிவு செய்யபடும் சரித்திர பதிவேடு ( திருட்டு, விபத்து வழக்குகளை தவிர இதர வழக்குளில் ஈடுபடுபவர்கள்)

## HO - (Habitual offender) - வழக்கமான குற்றவாளி
***********************************************************

SP பரிந்துரையின்பேரில் Collector உத்திரவு பெற வேண்டும். ரத்து செய்யவும் SP பரிந்துரையின்பேரில் Collector உத்திரவு பெற வேண்டும்
சரித்திர ஏடு ஒன்று காவல் நிலையத்திலும் ஒன்று DCRB யிலும் பராமரிக்கபடும்

## DC - (Dossier Criminal) - கைச்சுவடி குற்றவாளி
************************************************************

உட்கோட்ட எல்லைக்கு அப்பால் சென்றும் வேறு மாவட்டம் சென்றும் குற்றம் புரிபவர்
DSP, SP உத்திரவின் பேரிலே ஆரம்பிக்க வேண்டும்.
SP உத்திரவின் பேரிலே முடிக்க வேண்டும்.
சரித்திர ஏடு ஒன்று காவல் நிலையத்திலும் ஒன்று DCRB யிலும் பராமரிக்கபடும்

## KD - (known Depredator) - ஊரரிந்த குற்றவாளி
*****************************************************

SHO தன்னிச்சையாக ஆரம்பிக்கலாம்

1) ஆயுள் தண்டனை பெற்று விடுதலை ஆனவர்
2) நஞ்சு கலப்பு வழக்கில் 1 முறை தண்டனை பெற்றவர்
3) 395 – 402 சட்டபிரிவு வழக்கில் 1 தண்டனை பெற்றவர்
4) 392 – 394 சட்டபிரிவு வழக்கில் 2 முறை தண்டனை பெற்றவர்
5) கன்னகளவு வழக்கில் 2 முறை தண்டனை பெற்றவர்
6) திருட்டு வழக்கில் 3 முறை தண்டனை பெற்றவர்
7) 109 Crpc 2
8) 110 Crpc 1

## Suspect - சந்தேக நபர்
**********************************

சொத்து வழக்குகளில் சிறு குற்றம் புரிவோர் மற்றும் குற்ற செயல்களில் ஈடுபட கூடும் என கருத கூடியவர்கள் மீது DSP உத்திரவின்பேரில் ஆரம்பிக்கலாம்

மேற்கண்ட கெட்ட நடத்தைகாரர்கள் ஆஜரில் உள்ளனரா என்பதை அறிய காவல் ஆளினர்கள் எல்லோரும் தணிக்கை செய்யலாம்.

Rowdy - போக்கிரி
*******************

பொது ஜன அமைதியை கெடுக்கும் வகையில் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுபவர்கள் மீது DSP உத்திரவின்பேரில் ஆரம்பிக்கலாம்

வருடத்திற்கு ஒருமுறை தொடர்ந்து பராமரிக்க DSP அவர்களிடம் உரிய படிவத்தின் மூலம் அனுமதி பெற வேண்டும்

போக்கிரியை உதவி ஆய்வாளர் அந்தஸ்து உள்ளவர்தான் விசாரிக்க வேண்டும். பகலில் தான் விசாரிக்க வேண்டும். கெட்ட நடத்தைகாரர் பதிவேட்டில் பதிவு செய்யும் போது ஆஜரில் உள்ளவர்களை EP (Enquiry Present) என்றும், ஆஜரின்மையாக உள்ளவர்களை EA (Enquiry Absent) என்றுதான் குறிப்பிட வேண்டும்.

## <u>LLI ( Alphapatical Loose Leaf Crime classification Index)</u>

**அகர வரிசை குற்ற வகைபாட்டு தனிதாள் அட்டவணை**

*******************************************************************

பாகம் - I ல் பதிவு செய்யபடும் அனைத்து வழக்குகளும் இதில் அகர வரிசை வகைபாட்டடின் கீழ் பதிவு செய்ய வேண்டும்

I - Dacoity - வன்முறையுடன் கூடிய குற்றம்
II - House Breaking - கன்ன களவு
III - House Theft - வீட்டு திருட்டு
IV - Theft - சாதாரண திருட்டு
V - Cattle theft - கால்நடை திருட்டு
VI - Receiver of Stolen Property - திருட்டு பொருளை வாங்குபவர்கள்
VII - Cheating - ஏமாற்றுதல்
VIII – Counter Fêting - கள்ள நாணயம் தயாரித்தல்
IX - Criminal Breach of Trust - குற்றமுறை மோசடி மற்றும் கையாடல்
X - Kidnapping - ஆள்கடத்தல்

1) **Name war Index ( பெயர் அகர வரிசை பட்டியல்)**
2) **Local Station Ex convict Register (உள்ளுர் பழங்குற்றவாளிகள் பதிவேடு)**
3) **Other Station Ex convict Register ( வெளி காவல் நிலைய பழங்குற்றவாளிகள் பதிவேடு)**

*******************************************

சொத்து வழக்குகள் தண்டனையில் முடிந்தால் அவற்றில் சம்மந்தபட்ட எதிரிகளை மேற்கண்ட பதிவேடுகளில் பதிவு செய்திட வேண்டும்

எல்லா குற்றவாளிகளையும் **Name war Index** ல் பெயர் அகர வரிசையின்படி பதிவு செய்திட வேண்டும்

Local குற்றவாளிகளை **Local Station Ex convict Register** பதிவேட்டிலும் வேறு மாவட்டத்தில் உள்ள குற்றவாளிகளை **Other Station Ex convict Register** லும் பதிவு செய்திட வேண்டும்

வருடத்திற்கு ஒரு முறை எல்லா குற்றவாளிகளையும் தணிக்கை செய்ய வேண்டும் **Other Station Ex convict Register** ல் உள்ள பழங்குற்றவாளிகளை குறித்து **Ex convict** நமுனாவில் பதிவு செய்து காவலரை தனி அலுவலாக நியமித்து அனுப்பி தணிக்கை செய்திட வேண்டும்

வருடத்திற்கு ஒரு முறை தொகுப்பு (Abstract) போட வேண்டும்

**BCR – A ( Bad Character roll) கெட்ட நடத்தைக்காரர்கள் விசாரணை படிவம்**

*************************************************************************************

தனது காவல் நிலைய சரகத்தில் உள்ளவர்கள் வெளிகாவல் நிலைய சரகங்களில் குற்றங்களில் ஈடுபட்டுள்ளார்களா என்பதினை அறிய இந்த படிவத்தை பூர்த்தி செய்து சம்மந்தபட்ட காவல் நிலையத்திற்கு அனுப்பி அறிக்கை பெற வேண்டும்

**BCR – B ( Bad Character roll) கெட்ட நடத்தைக்காரர்கள் விசாரணை படிவம்**

*************************************************************************************

வெளிகாவல் நிலையங்களில் உள்ளவர்கள் தங்களது காவல் நிலையத்தில் தங்கியிருந்து குற்ற செயல்களில் ஈடுபட்டால் அவர்குளுடைய முந்தைய நடவடிக்கைகளை குறித்து அறிய இந்த படிவத்தினை பூர்த்தி செய்து சம்மந்தபட்ட காவல்நிலையத்திற்கு அனுப்பி அறிக்கை பெற வேண்டும்

**Conviction Memo ( தண்டனை நமுனா**

*********************************************

சொத்து வழக்குகள் தண்டனை பெற்றால் அது குறித்த விபரங்களை தண்டனை நமுனாவில் குறிப்பிட்டு எதிரியின் கைரேகை பதிவுகள் மற்றும் எதிரிக்கு சரித்திர ஏடு பராமரிக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதற்கான படிவத்துடன், படிவத்தில் உதவி ஆய்வாளர், காவல் ஆய்வாளர், காவல்துணை கண்காணிப்பாளர் ஆகியோரின் கையொப்பத்துடன் மாவட்ட கைரேகை கூடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். பின்னர் திருப்பி அனுப்பபட்ட தண்டனை நமுனாவை, நமுனா புத்தகத்தில் ஒட்ட வேண்டும்

**Gage Abstract ( குற்ற சுருக்கம் பதிவேடு**

****************************************

காவல் நிலையத்தில் பதிவாகும் வழக்குகளை சுருக்கமாக இந்த பதிவேட்டில் 3 மாதங்களுக்கு ஒரு முறை பதிவு செய்ய வேண்டும்

**மாதிரியாக**

| | | | | |
|---|---|---|---|---|
| Murder:- | 15 | 18 | 40 | 85 |
| | UI | PT | Con | MF |

Murder For Gain , Dacoity ,Robbery ,H.B by Day, HB by Night, Theft, 307 IPC, 326 IPC ,325 324, 323, இவ்வாறான தலைப்பின் கீழ்பதிவு செய்ய வேண்டும்

பதிவு செய்ய வேண்டிய காலங்கள்

01.01.2014 முதல் 30.03.2014, 01.01.2014 முதல் 30.06.2014,
01.01.2014 முதல் 30.09.2014, 01.01.2014 முதல் 31.12.2014

**Prisoner Search Register (PSR) கைதி பரிசோதனை பதிவேடு**
**Arrest Card கைது அட்டை**
**Arrest intimation கைது குறிப்பாணை**
**Sentry Relief book காவல் மாற்று பதிவேடு**

***************************************************** *****************

எதிரியை கைது செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு வரும்போது மேற்கண்ட பதிவேடு மற்றும் அது சம்மந்தமான படிவங்களில் பதிவு செய்திட வேண்டும்

**FIR Index , Arrest Card, PSR ( Prisoner Search Register)** ஆகியவைகளில் Cross Reference போட வேண்டும்

GD Vol ……………………….. Page No…………………

PSR Vol ……………………… Page No …………………
Sentry Reliefe Book …………… Page No …………………
Arrest Card No…………………………………………….
Bail Bond No……………………………………………….

## Arrest intimation ( கைது குறிப்பாணை )

*********************************************

உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் கைது குறிப்பாணை தயார் செய்யபட்டு பராமரிக்கபட்டு வருகிறது. 11 கட்டளைகள் கொடுக்கபட்டுள்ளன. எதிரியை கைது செய்யும்போது இந்த குறிப்பாணை தயார் செய்யபட்டு எதிரிக்கு நகல் வழங்கபட வேண்டும்

முதல் நகல் எதிரிக்கு கொடுக்கபட வேண்டும்
இரண்டாவது நகல் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்
மூன்றாவது நகல் நிர்வாகதுறை நடுவருக்கு அனுப்ப வேண்டும்
நான்காவது நகல் வழக்கு கோப்பில் கோர்வை செய்ய வேண்டும்

W.P Criminal No. 592/1987
Hon'ble Judge Tr. T.K. Basu Vs West Bengal 1997(1) Scc 4
Date of judgement 18.12.1996
உத்திரவுபடி உச்சநீதிமன்ற வழிகாட்டுதலான 11 கட்டளைகள் பிறப்பிக்கபட்டுள்ளது

## Process Register ( சம்மன்,வாரண்டு பதிவேடு

****************************************************

அழைப்பாணை பிடியாணைகளை நீதிமன்றத்தில் இருந்து பெற்று வந்த உடன் அவற்றினை இந்த பதிவேட்டில் தவறாது பதிவு செய்ய வேண்டும் அழைப்பாணை பிடியாணைகளைகளின் பின்புறம் SWR 32/ V2/14 ( Summon Warrant Register ) என குறிப்பிட வேண்டும்
இரண்டு மாதத்திற்கு ஒருமுறை நீதிமன்ற பதிவேட்டுடன் ஒப்பிட்டு ( Comparison ) நீதிமன்ற சான்று பெறவேண்டும்

## House Search slip ( வீட்டு சோதனை படிவம் )

*****************************************************

ஒரு வீட்டிற்குள் இருந்து ஒரு பொருளை கைப்பற்ற வேண்டுமானாலும் எதிரியை கைது செய்ய கூடிய நிலை ஏற்பட்டாலும் வீட்டு சோதனை ஜாபிதா தயார் செய்து அதனை நீதிமன்றத்திற்கு அனுமதிக்காக அனுப்பி விட்டுதான் வீட்டிற்குள் நுழைய வேண்டும்

## Referred and Charge sheet Notice ( RC Notice)

## Final Report ( இறுதியறிக்கை )

*******************************************************************

MF (Mistake of Facts) சங்கதிணை பொறுத்தமட்டில் உண்மைக்கு புறம்பானது,
ML ( Mistake of Law ) சட்டத்தை பொறுத்தமட்டில் பிழையுடையது
FAD ( Further Action Dropped) மேல் நடவடிக்கை நிறுத்தபடுகிறது
UN ( Un Detected) கண்டு பிடிக்க முடியாதது
ஆகிய தலைப்பின் கீழ் வழக்குகளை Refer செய்யும்போது RC Notice, Final report ஆகியவைகளை பூர்த்தி செய்து வாதிக்கு RC Notice சார்பு செய்ய வேண்டும்

## Gun Licence Register (துப்பாக்கி உரிமம், தணிக்கை பதிவேடு)

*******************************************************************

துப்பாக்கி உரிமம் பதிவேட்டில் துப்பாக்கியை பற்றிய அனைத்து விபரங்களையும் பதிவு செய்ய வேண்டும். காலாண்டுக்கு ஒரு முறை துப்பாக்கி விபர தொகுப்பு (Abstract) போட வேண்டும்.

ஆண்டில் இருமுறை துப்பாக்கியை தணிக்கை செய்ய வேண்டும். Rifle, Revolver, Pistol ஆகியவற்றை ஆய்வாளர்தான் தணிக்கை செய்ய வேண்டும்
காலாண்டுக்கு ஒருமுறை தாலுகா அலுவலக பதிவேட்டுடன் ஒப்பிட (Comparison ) வேண்டும்

SBBL – Single Barrel Bridge Load
SBML – Single Barrel Muzzle Load
DBBL – Double Barrel Bridge Load
DBML- Double Barrel Muzzle Load
Rifle
Revolver
Pistol
9 MM Pistol: - Piston Browning F.N (Fabrique National) 9 mm H.P (High Power) Self Loaded Semi Automatic Weapon

1540 ஆண்டு இத்தாலி நாட்டில் உள்ள டெஸ்கோனியா மாவட்டத்தில் பிஸ்டோய என்ற கிராமத்தில் எத்தாலி என்ற ஆசாரியாரால் 9mm-Pistol கண்டுபிடிக்கபட்டது. இதற்கென்று நிர்ணயிக்கபட்ட அளவுகள் கிடையாது. அதன் பிறகு 1925 ம் ஆண்டு John Moses Browing என்பவரால் திருத்தி அமைக்கபட்டு பெல்ஜியம் நாட்டில் உள்ள Fabrique National என்ற கம்பெனியால் தயாரிக்கபட்டது. இதன் பேரலின் விட்டம் 9mm என்பதாலும் இது High Power Weapon என்பதாலும் இதற்கு Piston Browning FN( Fabriane National ) 9 mm HP ( High Power) Self Loaded Semi Automatic Weapon என்று பெயர்

## Gun Deposit Register ( துப்பாக்கி வைப்பு பதிவேடு )

**************************************************************

அவசர காலங்களில் காவல் நிலையங்களில் ஒப்படைக்கபடும் துப்பாக்கிகளை இந்த பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். துப்பாக்கி உரிமையாளர் கையோப்பம் பெற வேண்டும் திருப்பி கொடுக்கும்போதும் துப்பாக்கி உரிமையாளர் கையொப்பம் பெற வேண்டும்

## Govt Property Register அரசு சொத்து பதிவேடு

*****************************************************

A.R. Store, DPO Store என இரண்டு அரசு சொத்து பதிவேடுகள் பராமரிக்க வேண்டும்

1) A.R. Store பதிவேட்டில் Arms and Ammunation பற்றிய விபரங்களை பதிவு செய்திட வேண்டும். கிடங்கில் இருந்து பொருட்கள் வழங்கபட்டால் அவற்றை பதிவேட்டில் பதிவு செய்யும்போது அதை வழங்கியதற்கான நமுனாவில் உள்ள I.V நம்பர் ( Issue Voucher No ) மற்றும் தேதிகளை குறிப்பிட வேண்டும். பொருட்களை திருப்பி அனுப்பினாலும் அதற்கான R.V. No ( Return Voucher No) மற்றும் அதற்கான தேதியையும் குறிப்பிட வேண்டும்

2) DPO. Store பதிவேட்டில் புத்தகங்கள் மற்றும் அனுப்பபடும் உபகரணங்களின் விபரங்களை பதிவு செய்திட வேண்டும். கிடங்கில் இருந்து பொருட்கள் வழங்கபட்டால் அவற்றை பதிவேட்டில் பதிவு செய்யம்போது அதை வழங்கியதற்கான நமுனாவில் உள்ள I.V நம்பர் (Issue Voucher No ) மற்றும் தேதிகளை குறிப்பிட வேண்டும். பொருட்களை திருப்பி அனுப்பினாலும் அதற்கான R.V. No ( Return Voucher No) மற்றும் அதற்கான தேதியையும் குறிப்பிட வேண்டும்

அரையாண்டுக்கு ஒருமுறை 01.04.2014 முதல் 30.09.2014 வரை
அடுத்தது 01.10.2014 முதல் 30.03.2015 என
A.R. Store, DPO Store ல் உள்ள பதிவேட்டுடன் ஒப்பிட வேண்டும்

## Cash Book (பண பதிவேடு)

******************************

பண பெட்டிக்கான சாவி இரண்டு உண்டு. ஒன்று காவல் நிலையத்தில் இருக்கும். மற்றொன்று DPO வில் இருக்கும். வருடத்திற்கு ஒரு முறை காவல் நிலயைத்தில் உள்ள சாவியை DPO வில் கொடுத்து விட்டு DPO வில் உள்ள சாவியை நாம் வாங்கி உபயோகபடுத்த வேண்டும்

## Community Service Register ( CSR ) சமுதாய பணி பதிவேடு

**************************************************

PSO , சட்டம் பிரிவு இல்லை. தலைமை அலுவலக குறிப்பாணை ந.க எண் 161/Camp/DGP/93 Dt 11.1.1994 ன்படி மனு ரசிது வழங்கபட்டு மனு விசாரணை செய்யபடுகிறது

## Rowdy Register ( போக்கிரி பதிவேடு)

*************************************

திருட்டு, வாகன விபத்து, 109 கு.வி.மு.ச போன்ற வழக்குகளை தவிர இதர வழக்குகள் தண்டனையில் முடியும் போது அந்த வழக்கில் சம்மந்தபட்ட எதிரிகளை இந்த பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்

General War , Name War, Village War என தனிதனியாக மூன்று பகுதிகளாக விவரித்து பதிவு செய்ய வேண்டும்

## KD Check Register (கெட்ட நடத்தைக்காரர்கள் தணிக்கை பதிவேடு)

***************************************************************************

கெட்டநடத்தைகாரர்களை ரோந்து வாரியாக வரிசை படுத்தி எழுத வேண்டும் கெட்ட நடத்தைகாரர்கள் 1 மாதம் தொடர்ந்து ஆப்செண்டாக இருந்தால் அவரை குறித்து DCRB க்கு OV card ( Out of View) அனுப்ப வேண்டும். அண்டை காவல் நிலையங்களுக்கு இது குறித்து Form 120 மூலம் தகவல் தெரிவிக்க வேண்டும். அவரை கண்டு பிடித்தால் அவர் ஆப்செண்டாக இருந்த காலங்களில் எங்கு என்ன வேலை செய்தார் போன்ற விபரங்களை கேட்டு தெரிந்து வாக்குமூலம் பதிவு செய்து சரித்திர ஏட்டில் வைக்க வேண்டும். பின்னர் ஆஜரில் உள்ளதாக குறிப்பிட வேண்டும்

அமாவசை நாட்களை தனியாக தெரியும்படியாக மேலே குறிப்பிடபட்டிருக்கும் தேதிகளில் கோடிட்டு காண்பிக்க வேண்டும்

போக்கிரியை உதவி ஆய்வாளர் அந்தஸ்து உள்ளவர்தான் விசாரிக்க வேண்டும். பகலில் தான் விசாரிக்க வேண்டும். தணிக்கை செய்ய வேண்டாம். கெட்ட நடத்தைகாரர் பதிவேட்டில் போக்கிரிகளை விசாரணை செய்ததை பதிவு செய்யும் போது EP (Enquiry Present) or EA (Enquiry Absent) என்றுதான் பதிவு செய்ய வேண்டும். Remark காலத்தில் கெட்ட நடத்தைகாரர் ஆப்செண்டாக இருந்தால் எந்த தேதியில் இருந்து ஆப்செண்டாக உள்ளார் என்பதையும் ஜெயிலில் இருந்தால் எந்த காவல் நிலைய வழக்கில் எந்த தேதியில் இருந்து ஜெயிலில் உள்ளார் என்ற விபரமும் குறிப்பிட வேண்டும்

## *மேற்கண்டவைகளை தவிர வேறு பதிவேடுகளும் உள்ளன*

### வழக்கில் சம்மந்தபட்ட சொத்துகளை பராமரிக்க பதிவேடுகள் பராமரிக்க வேண்டும்

****************************************************************************************

Crime Case Property Register – சொத்து வழக்கு
Other IPC , Non IPC Case Property Register - இதர வழக்கு
Prohibition Case Property Register - மதுவிலக்கு வழக்கு

வழக்கு சம்மந்தமாக கைப்பற்றபடும் சொத்துகளை இந்த பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் சொத்தின் தன்மை மற்றும் விபரங்கள் , நீதிமன்றத்திற்கு அனுப்பிய நாள், நீதிமன்றத்தில் ரிமாண்டிற்கு எடுத்த நாள், PR.No ( Property remand No) மற்றும் சொத்து திருப்பி கொடுக்கபட்ட நாள் ஆகியவைகள் குறிப்பிட வேண்டும்

### நமுனாக்கள் பராமரிக்க வேண்டும்

**************************************

General Memo
Cash Memo
Medical Memo (எடுத்த நடவடிக்கை பற்றி நமுனாவில் குறிப்பிட வேண்டும்)
Store Memo

## L.A.R.S ( List of Articles Return to Store )

**********************************************************

மாவட்ட பண்டக சாலைக்கு பொருட்களை திருப்பி அனுப்பும்போது இந்த படிவத்தை பயன்படுத்த வேண்டும்

Form 54 தனியார் துப்பாக்கிகளை AR ல் டெபாசிட் செய்ய இந்த படிவத்தை பயன்படுத்த வேண்டும்

**Finger Print Despatch Register:-**

இரண்டு பகுதிகளாக பராமரிக்க வேண்டும். குற்றவாளிகளுடைய கைரேகைகளை பதிவு செய்த பின்னர் அவற்றினை கைரேகை கூடத்திற்கு அனுப்பும்போது இந்த பதிவேட்டில் பதிவு செய்து அனுப்ப வேண்டும்

பின்னர் வழக்குகள் தண்டனையில் முடிந்தால் Conviction Memo வுடன் கைரேகை பதிவுகளையும் இணைந்து உதவி ஆய்வாளர், காவல் ஆய்வாளர், துணை காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்களின் கையோப்பத்துடன் மாவட்ட கைரேகை கூடத்திற்கு அனுப்ப வேண்டும்

கைரேகை பதிவு செய்ய கூடிய படிவங்கள் இரண்டு வகைகள் உண்டு. சொத்து வழக்குகளில் கைரேகை பதிவு செய்யும்போது Search Slip, 2) Search Card ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் 3 படிவங்களில் பதிவு செய்யவேண்டும். முழுகைரேகை ( Palm Print ) பதிவு ஒன்றும் எடுக்க வேண்டும். அவற்றில Search Slip, Palm Print ஐ மாவட்ட கைரேகை கூடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அவைகள் சோதனை செய்யபட்டு பழைய வழக்குகள் இருந்தால் அவைகள் குறிப்பிடபட்டு திரும்பி அனுப்பி வைக்கபடும். அதனை அப்படியே பாதுகாப்பில் வைத்து கொண்டு அந்த வழக்கு தண்டனையில் முடிந்தால் Conviction Memo வுடன் கைரேகை படிவங்களில் பின்புறம் தண்டனை விபரங்களை குறிப்பிட்டு அவற்றினை திரும்ப மாவட்ட கைரேகை பதிவு கூடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்

## Arms Distibution Register

காவல் நிலையங்களுக்கு வழங்கபடும் ஆயுதங்களை இந்த பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். ஆயுதங்களுக்குரிய Butt.No, Body No ஆகியவைகளை குறிப்பிட வேண்டும். ஆயுதங்கள் எந்த காவல் ஆளினர்களுக்கு வழங்கபட்டதோ அந்த காவல் ஆளினர்களிடம் பதிவேட்டில் கையோப்பம் பெற வேண்டும்

### LINE HUT REGISTER

காவலர் குடியிருப்பு பதிவேடு பராமரிக்கபட வேண்டும். காவலர்களை குடியிருப்பு செய்யும் அதிகாரம் காவல் ஆய்வாளருக்கு உள்ளது.

## HS. Index ( History Sheet Index) PSO 757

கெட்ட நடத்தைகாரர்கள் சரித்திர பதிவேடு தொகுப்பு ஆகும். சரித்திர பதிவேடு ஆரம்பிக்கும் போது இதில் உள்ள வரிசை எண் பிரகாரமாக தான் சரித்திர பதிவேடு நம்பர்கள் வழங்பட வேண்டும்

## HO Forecast Register

வழக்கமான குற்றவாளிகளை கண்காணிக்கவும், வழக்கமான குற்றவாளிகள் யார் என தெரிந்து அவர்களுக்கு சரித்திர பதிவேடு ஆரம்பிக்கவும் இந்த பதிவேடு பரமரிக்க வேண்டும்

***சட்டம் என்பது மக்களுடைய வாழ்க்கைமுறைகளை நெறிபடுத்தி இயற்றபட்ட திட்டம்***

************************************************************************************

**முப்பெரும் சட்டம்**

********************

**இந்திய தண்டனை சட்டம் - 1860**
**குற்ற விசாரணை முறை சட்டம் - 1973**
**இந்திய சாட்சிய சட்டம் - 1872**

## இந்திய தண்டனை சட்டம் - 1860

*************************************************************

அத்தியாயம் ( Chapter ) - 23
சட்டபிரிவு ( Section ) - 511

| | | |
|---|---|---|
| 1 | சொத்து வழக்கில் (Crime Case) முன்தண்டனை அடைந்தவர் மீது குற்றபத்திரிகையில், காண்பிக்கபடும் சட்டபிரிவு | 75 IPC |
| 2 | 7 முதல் 12 வரையுள்ளவர்கள் தவறு செய்தால் தவறு இல்லை | 83 IPC |
| 3 | முதல் தகவலறிக்கை பதிவு செய்ய மறுத்தால் குற்றம் | 166 (A) IPC |
| 4 | பாதிக்கபட்ட நபருக்கு மருத்துவ பரிசோதனை செய்ய மறுத்தால் குற்றம் | 166(B) IPC |
| 5 | VAO விடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மறுத்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் குற்றம் | 191 IPC |
| 6 | பாதிக்கபட்ட பெண்ணின் புகைபடத்தை பத்திரிகையில் பிரசுரம் செய்தால் குற்றம் | 228 (A) IPC |
| 7 | முறைகேடான தடுப்பு | 341 IPC |
| 8 | முறைகேடான சிறைபிடிப்பு | 342 IPC |
| 9 | 16 வயதிற்குட்பட்ட ஒரு பெண்ணின் சம்மதம் இன்றி உடலுறவு கொள்ளுதல் | 376 (i) IPC |
| 10 | 15 வயதிற்குட்பட்ட தனது மனைவியோடு உடலுறவு கொள்ளுதல் | 376(ii) IPC |
| 11 | காவல்துறை அதிகாரி தன் கீழ் பணிபுரியும் காவல் அதிகாரியின் காவலில் இருக்கும் பெண்ணிடம் வன்புணர்ச்சி செய்தால் | 376(iii) IPC |
| 12 | விவாகரத்து பெற்ற தன் மனைவியுடன் வன்புணர்ச்சி செய்தால் | 376(A) IPC |
| 13 | பொது ஊழியர் தன் கீழ் பணிபுரியும் பெண்ணிடம் அதிகாரத்தை பயன்படுத்தி வன்புணர்ச்சி செய்தால் | 376(B) IPC |
| 14 | சிறைசாலை, காப்பகங்களில் உள்ளவர்களிடம் தனது அதிகாரத்தை பயன்படுத்தி வன்புணர்ச்சி செய்தால் | 376(C) IPC |
| 15 | மருத்துவரோ அல்லது பணியாளரோ தனது அதிகாரத்தை பயனபடுத்தி வன்புணர்ச்சி செய்தால் | 376(D) IPC |
| 16 | பொருளை தவற விட்டவர், தவறிய பொருளை எடுத்தவரிடம் கேட்டும் கொடுக்க மறுத்தால் குற்றம் | 408 IPC |

**சச்சரவிற்கும், கலகத்திற்கும் உள்ள வேறுபாடு**

| சச்சரவு ( Affray) Sec 160 IPC | | கலகம் ( Riot ) Sec 141 to 149 IPC |
|---|---|---|
| 1 | இது பொது இடத்தில் செய்யபட்டிருத்தல் வேண்டும் | தனி இடம் எதிலும் செய்யபடலாம் |
| 2 | இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் செய்யபட்டு இருக்க வேண்டும் | ஐந்துக்கு மேற்பட்டவர்கள் செய்யதிருக்க வேண்டும் |
| 3 | பொது அமைதியை குலைத்தல் | வன்முறையால் அச்சுறுத்தி பொது அமைதியை குலைத்தல் |

**34 IPC விற்கும் , 149 IPC விற்கும் உள்ள வேறுபாடு**

| | Sec 34 IPC | Sec 149 IPC |
|---|---|---|
| 1 | ஒன்றிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் | ஐந்திற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் |
| 2 | பொது கருத்து அவசியம் (Common Intention) | பொது நோக்கம் அவசியம் (Common object ) |
| 3 | குற்ற செயல் ஏற்ப்பட்டால்தான் குற்றபொறுப்பு ஏற்படும் | பிரிவு 141 ல் கூறப்படடுள்ளபடி பொது நோக்குடன் கூட்டம் கூடினாலே போதும் |
| 4 | பொது குற்ற நோக்குடன் சென்றவர்களில் ஒருவர் தவறு செய்தால் அது உடன் இருந்தவருக்கும் பொறுந்தும் | பொது குற்ற நோக்குடன் சென்ற 5 பேர்களுக்கு மேற்பட்டவர்களில் ஒருவர் தவறு செய்தாலும் அது உடன் இருந்த எல்லாருக்கும் பொறுந்தும் |

**திருட்டுக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ள வேறுபாடு**

| | Sec 379 IPC ( திருட்டு) | Sec 384 to 387 IPC (அச்சுறுத்தல்) |
|---|---|---|
| 1 | திருட்டு ஒருவரின் உடமையில் இருந்து ஒரு பொருளை அவரது சம்மதம் இல்லாமல் எடுத்து செல்வது | அச்சுறுத்தி பறித்தலில் நேர்மையற்ற முறையில் சம்மதம் பெறப்படுகிறது |
| 2 | திருட்டு அசையும் பொருளை சேர்ந்தது | அச்சுறுத்தி பறித்தலில் அசையா பொருளை சார்ந்ததாகவும் இருக்கலாம் |
| 3 | திருட்டில் வன்முறைக்கு இடமில்லை | அச்சுறுத்தி பறித்தலில் தீங்கு விளையும் என்ற அச்சத்தின் வாயிலாக செயல் நடைபெறுகிறது |
| 4 | திருட்டில் குற்றம் நேரடியாகவோ மறைமுகமாகவோ நடைபெறுகிறது | அச்சுறுத்தி பறித்தலில் குற்றம் நேரடியாக நடைபெறுகிறது |

## IPC

| | |
|---|---|
| **10 IPC** | **ஆண், பெண்** என்றால் என்ன என்பதை குறிக்கும் |
| **11 IPC** | **ஆள்** என்ற சொல் ஒரு வணிக நிறுவனம் அல்லது சங்கம் அல்லது ஆட்களின் குழு என்பதை குறிக்கும் |
| **14 IPC** | **அரசு ஊழியர்** என்பதை குறிக்கும் |
| **17 IPC** | **அரசு** ( மாநில அரசு) என்பதை குறிக்கும் |
| **18 IPC** | **இந்தியா** என்பதை குறிக்கும் |
| **19 IPC** | **நீதிபதி** என்பதை குறிக்கும் |
| **20 IPC** | **நீதிமன்றம்** என்பதை குறிக்கும் |
| **21 IPC** | **பொது ஊழியர்** என்பதை குறிக்கும் |
| **40 IPC** | **குற்றம்** என்ற சொல்லை குறிக்கும் |
| **41 IPC** | **சிறப்பு சட்டம்** (Special Laws ) என்பதை குறிக்கும் |
| **42 IPC** | **வட்டார சட்டம் (** Local Laws **)** ) என்பதை குறிக்கும் |
| **44 IPC** | **கேடு, ஊறு** என்பது உடலுக்கோ அல்லது மனதிற்கோ அல்லது பெயருக்கோ அல்லது சொத்திற்கோ சட்டத்திற்கு மாறான வகையில் உண்டாக்க படும் தீங்கு |
| **45 IPC** | **உயிர்** என்றால் என்ன என்பது |

| | |
|---|---|
| **46 IPC** | **மரணம்** என்ற சொல் மனித மரணத்தை குறிக்கும் |
| **47 IPC** | **விலங்கு** மனிதன் அல்லாத உயிர் பிராணி எதையும் குறிக்கும் |
| **48 IPC** | **கலம்** நீர் வழியாக மனிதன் அல்லது பொருளை கொண்டு செல்ல செய்யபட்ட எதையும் குறிக்கும் |
| **49 IPC** | **ஆண்டு,மாதம்** என குறிப்பிடுவதை பிரிட்டீஸ் நாட் காட்டியிலுள்ளதை தான் நாமும் கணக்கிடுகிறோம் |

**Grave Crime Report case**
*************************

Rs 35000 க்கு மேற்பட்ட கன்ன களவு ( Burglary case - H.B by Day , H.B Night )
Rs 50000 க்கு மேற்பட்ட களவு ( Theft Case )

Theft (A) :- என்பது ( Major Theft ) Rs 50 ரூபாய்க்கு மேற்பட்ட திருட்டு
Theft (B) :- என்பது ( Minor Theft ) Rs 50 ரூபாய்க்கு கீழ் உள்ள திருட்டு
Theft (C) :- என்பது ( Cattle Theft ) கால் நடை திருட்டு

சொத்து வழக்குகள் தாக்கலாகும் போது எதிரி தெரியவிட்டால் உடன் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு கிடைக்கும் தடயங்களை கைப்பற்ற வேண்டும். பின்னர் சம்பவம் குறித்து அண்டை காவல் நிலையங்களுக்கு காவல் அறிக்கை ( Hue and Cry Report ) அனுப்ப வேண்டும். LLI பார்த்து லோக்கல் MO Criminal List தயார் செய்து உடன் காவலரை தனி அலுவலாக நியமித்து தணிக்கை செய்ய வேண்டும். பின்னர் DCRB ல் இருந்து அனுப்பபடும் Advisary Memo ல் குறிப்பிட்டு அனுப்பபட்டிருக்கும் MO Criminal களை தணிக்கை செய்ய வேண்டும்

**காயங்கள் ( Injuries)**
**********************

**முனை மழுங்கிய ஆயுதங்கள் மற்றும் சந்தர்பங்களில் ஏற்பட கூடிய காயம் ( Blund Weapon injuries)**
*********************************************************************************************************

Abrasion injury ( சிராய்ப்பு காயம் )
Laceration injury ( சிதைந்த காயம் )
Contusion injury ( கன்றிய காயம் அல்லது வீக்க காயம் )
Fracture injury ( எலும்பு முறிவு காயம் )

**கூர்மையான ஆயுதங்களால் ஏற்படும் காயம் ( Sharp Edged Weapon injuries )**
*********************************************************************************************************

Incised injury ( கிழிந்த காயம் )
Cut injury ( வெட்டு காயம் )
Stab injury ( குத்து காயம் )
Punture injury ( துளை காயம் )

**DNA – Test :-** ( De-oxi-Ribo- Nuclic – Acid ) என்பது மரபணு பரிசோதனை எனப்படும்

**Dyeotam Test :-** தண்ணீரில் ஒருவர் மூழ்கி இறந்தால், இறந்தவர் அந்த இடத்தில் உள்ள தண்ணீரில்தான் மூழ்கி இறந்தார் என்பதை உறுதி செய்ய அவர் மூழ்கி இறந்த இடத்தில் உள்ள தண்ணீரை ஒரு பாட்டிலில் எடுத்தும், இறந்த உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பும்போது தண்ணீர் பாட்டிலையும் உடன் சோதனைக்கு அனுப்ப வேண்டும். அந்த சோதனையின் பெயர்

Dyeotam Test

**SuperImposion Test**:- அடையாளம் தெரியாத இறந்த ஒருவருடைய உடலை அடையாளம் கண்டு பிடிக்க பிரேத பரிசோதனையின்போது அவருடைய மண்டை ஓடு மற்றும் தொடை எலும்புகளை சோதனைக்கு சேகரிக்க வேண்டும். அதன் பெயர் Super Imposion Test எனப்படும். இறந்தவரை குறித்த தடயங்கள் கிடைக்க பெற்றால் அவருடைய புகைபடத்துடன் மண்டைஓடு மற்றும் தொடை எலும்புகளை சென்னை தடய அறிவியல் கூடத்திற்கு அனுப்பி வைத்து அறிக்கை பெற வேண்டும்

41 IPC-Special Laws தனி சட்டம் என்பது பாராளுமன்றத்தால் அவசரத்தின் நிமித்தம் குற்றங்களை தடுக்க இயற்ற கூடிய சட்டம்

Example - Indian Arms act
Indian Explosive act

42 IPC - Local Laws உள்ளுர் சட்டம் என்பது சட்டமன்றத்தால் அவசரத்தின் நிமித்தம் குற்றங்களை தடுக்க இயற்ற கூடிய சட்டம்

Example - Tamil Nadu Prohibition act
Tamil Nadu Gaming act

## குற்ற விசாரணை முறை சட்டம் - 1973

**************************************************************************

முதலில் இயற்றபட்ட ஆண்டு - 1898
சுதந்திரம் அடைந்த பின் இந்திய குடியரசின் 24 ( 1973)ஆண்டில் திருத்தம் செய்யபட்டது
திருத்தம் செய்து கையொப்பம் ஆனது – 25.01.1974
அமுலுக்கு வந்தது - 01.04.1974
Chapter ( அத்தியாயம்) – 37
Section - ( சட்டபிரிவு ) - 484
Shedule ( அட்டவணை) – 2 ( 1. குற்றங்கள், தண்டனை, ஜாமினில் விடகூடிய விபரங்கள்)
( 2. நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய கூடியது)

## Section : - 2 Crpc

| | | |
|---|---|---|
| **2-A** | **Bailable offence** | பிணையில் விடக்கூடிய குற்றம் |
| **2-B** | **Charge Sheet** | குற்றச்சாட்டு |
| **2-C** | **Cognizable offence** | கைது செய்யக்கூடிய குற்றம் |
| **2-D** | **Complaint** | புகார் |
| **2-E** | **High court** | உயர் நீதிமன்றம் |
| **2-F** | **India** | இந்திய நாடு |
| **2-G** | **Inquiry** | பரிசீலனை |
| **2-H** | **Investigation** | புலன்விசாரணை |

| | | |
|---|---|---|
| **2-I** | **Judicial Proceeding** | நீதிமன்ற நடவடிக்கை |
| **2-J** | **Jurisdiction** | JM நீதிமனறத்திற்குள்ள வரம்பு |
| **2-K** | **Metropolitan** | பெருநகர் பிரிவு |
| **2-L** | **Non cognizable** | கைது செய்ய கூடியதல்லாத குற்றம் |
| **2-M** | **Notification** | அறிவிக்கை |
| **2-N** | **Offence** | குற்றம் |
| **2-O** | **In charge of Police Station** | காவல் நிலைய பொறுப்பு அலுவலர் |
| **2-P** | **Place** | இடம் |
| **2-Q** | **Pleader** | வாதுரைஞர் |
| **2-R** | **Police Report** | காவலறிக்கை |
| **2-S** | **Police Station** | காவல் நிலையம் |
| **2-T** | | நீக்கபட்டுள்ளது |
| **2-U** | **Public Prosecutor** | அரசு குற்றத்துரை வழக்கறிஞர் |
| **2-V** | **Sub Division** | உட்கோட்டம் |
| **2-W** | **Summons Case** | அழைப்பாணை வழக்கு |
| **2-Wa** | **Victim** | பாதிக்கபட்டவர் |
| **2-X** | **Warrant Case** | பிடியாணை கட்டளை வழக்கு |

| **Section 41 Crpc relating to powers to arrest without warrant** | |
|---|---|
| **C.I.P.S.O.D.E.R.A** | |
| **C - Cognizable offence**<br>பிடிக்க கூடிய குற்றங்களை செய்பவர்களை | **41(1)(a) Crpc** |
| **I – Possession of impliments to commit burglary**<br>கன்னமிடுவதற்கான கருவியை கையில் வைத்திருப்பது | **41(1)(b) Crpc** |
| **P – Proclaimed offenders**<br>விளம்பரம் செய்யபட்ட குற்றவாளிகள் | **41(1)(c) Crpc** |
| **S – Stolen Property**<br>திருட்டு சொத்தை வைத்திருப்பவனை | **41(1)(d) Crpc** |
| **O – Obstruction**<br>கடமையை செய்யவிடாமல் தடுக்கிறவனையும்,<br>காவலில் இருந்து தப்பி ஓடுகிறவனையும் | **41(1)(e) Crpc** |
| **D – Deserter from Army**<br>இராணுவத்தில் இருந்து விட்டோடியாக வந்தவனை | **41(1)(f) Crpc** |
| **E – Extradition**<br>இந்தியாவில் பிடிக்க கூடிய குற்றத்தை போன்ற ஒரு<br>குற்றத்தை வெளிநாட்டில் செய்துவிட்டு வந்தவரை | **41(1)(g) Crpc** |

| | |
|---|---|
| **R – Released Prisoner**<br>ஜெயிலில் இருந்து விடுதலை ஆகி சட்டபிரிவு 356 Crpc ஐ மீறுகிறவரை | **41(1)(h) Crpc** |
| **A- Another Police Officer**<br>எவரை கைது செய்வதற்காக வேண்டுகோள் எதுவும் எழுத்து மூலமாயினும் அல்லது வாய் மொழியாயினும் மற்றோரு காவல் நிலைய அலுவலரிடம் இருந்து வந்துள்ளதோ அவரை | **41(1)(i) Crpc** |

காவல் அலுவலா் பிடியாணயயின்றி கைது செய்தால் வழக்கு பதிவு செய்யகூடிய சட்டபிரிவு 41(1) Crpc

காவல் நிலைய பொறுப்பு அலுவலரால் (SI and above officer) பிடியாணையின்றி கைது செய்யபட்டால் வழக்கு பதிவு செய்யகூடிய சட்டபிரிவு 41(ii) Crpc

| | | |
|---|---|---|
| 1 | பிடியாணையின்றி காவல்துறையினா் கைது செய்யம் அதிகாரம் | 41 Crpc |
| 2 | ஊா் பெயா் தெரிவிக்காதவரை கைது செய்யும் அதிகாரம் | 42 Crpc |
| 3 | தனி நபா் கைது செய்யம் அதிகாரம் | 43 Crpc |
| 4 | நடுவரால் கைது செய்யபட கூடிய அதிகாரம் | 44 Crpc |
| 5 | ராணுவ வீரா் கைது செய்யபடுவதில் இருந்து விலக்கு | 45 Crpc |
| 6 | சூரிய உதயத்திற்கு முன்னும், பின்னும் கைது செய்ய கூடாது | 46(4) Crpc |
| 7 | குற்றவாளி ஒழிந்திருக்கும் இடத்தை சோதனை செய்யம் அதிகாரம் | 47 Crpc |
| 8 | கைதி தப்பி ஓடாமல் தடுக்க தேவைக்கு அதிகமான பலத்தை உபயோகபடுத்த கூடாது | 49 Crpc |
| 9 | கைது செய்யபட்டவரிடம் காரணத்தை கூற வேண்டும் | 50 Crpc |
| 10 | கைது செய்யபட்டவரை சோதனை செய்யம் அதிகாரம் | 51 Crpc |
| 11 | கைது செய்யபட்டவரிடம் இருந்து அபாயகரமான ஆயுதங்களை கைப்பற்றும் அதிகாரம் | 52 Crpc |
| 12 | காவல் அலுவலரின் பேரில் மருத்துவ பரிசோதனை | 53 Crpc |
| 13 | கைதியின் வேண்டுகோளின் பேரில் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்புவது | 54 Crpc |
